# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 ... ஆண்டு 2030 தை 28 வியாழக்கிழமை (11-02-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:65

பொது சன நூலகம் 11 FEB 1999 மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## சர்வமதக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

# அரசே போரை நிறுத்தி சமாதான முன் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்!

## படை வாபஸ் அதற்கு முதற்படி

வவுனியா, பெப்ரவரி 11

தமிழ் மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகவே போராடுகிறார்கள். யுத்தத்தை நடத்துவதும் செயற்படுத்துவதும் ஸ்ரீலங்கா அரசும் ஸ்ரீலங்கா இராணுவமுமே. ஆகவே ஸ்ரீலங்கா அரசும் ஸ்ரீலங்கா இராணுவமுமே யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும்.

இப்படி விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்த சர்வ மதக்குழுவினரிடமே மேற்கண்டவாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

மல்லாவியில் இச் சந்திப்பு நேற்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், அரசியல்துறையைச் சேர்ந்த விதுரன் ஆகியோரும் கூட இருந்தனர்.

28 பேர் அடங்கிய சர்வ மதக் குழு கடந்த திங்கட்கிழமை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச் சென்றது தெரிந்ததே.

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் முயற்சிக்கு ஆதரவு அளியுங்கள்

### சர்வமதக்குழு கோரிக்கை

வவுனியா, பெப். 11

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்துக்கு முன்முயற்சிகளை எடுத்து வருகிறார். விடுதலைப்புலிகள் இந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளை நேற்று மல்லாவியில் சந்தித்த சமயம் சர்வ மதக் குழுவினர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

மல்லாவியில் இடம்பெற்ற சந்திப்பில்பங்குகொண்டசர்வ மதக்குழுவினர்விடுதலைப்புலி

( 10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. வெளிநடப்பு

கொழும்பு, பெப். 11

வடமேல் மாகாணசபைத் தேர்தலின்போது அரசுத்தரப்பினர் மோசடிகள், வன்முறைகளில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து, அதனைக் கண்டித்து ஐ. தே, க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பிற்பகல் சபையில்இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே. (இ-3)

## தூதுக்குழுவில் சென்ற முக்கியஸ்தர்கள் சிலர்

வவுனியா, பெப். 11

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்குச் சென்றுள்ள 28 பேர் அடங்கிய சர்வமதக் குழுவில் இடம்பெற்றுள்ள முக்கியமானவர்களின் விவரம் வருமாறு:

★ அஸ்கிரிய மதபீட அனுநாயக்க தேரர் உடுகம உடகிரத்த நாயக்க தேரர்.
★ அமரபுர நிக்காய அனுநாயக்க தேரர் தலால தம்மலோக நாயக்க தேரர்.
★ பேராசிரியர் கலாநிதி கும்புறுகமுவ வஜ்ஜிரராம தேரர்.
★ அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கெனத் பெர்னாண்டோ
★ கத்தோலிக்க ஆயர் மன்றத் தலைவரும் இரத்தினபுரி ஆயருமான கலாநிதி மல்கம் ரஞ்சித்.
★ வணபிதா அன்ரனி சிறில். [இ-3)

## பன்னலவில் ஊரடங்கு

கொழும்பு, பெப். 11

குருநாகல் மாவட்டம் பன்னல பகுதியில் தொடரும் சிங்கள - முஸ்லிம் கலவரங்களை அடக்குவதற்காக பன்னல பொலீஸ் பகுதியில் நேற்று முதல் இரவு நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

தற்போது கலவரங்கள் ஓரளவு தணிந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6-க)



பழையகுருடி கதவைத் திறவா என்ற நிலையில் மீண்டும் தூது புறப்பட்டிருக்கினம் போல......!

## ஜேர்மன் குழு இன்று இலங்கை வருகிறது

கொழும்பு, பெப். 11

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியாவுக்கு பொறுப்பான மனித உரிமைக்குழு பிரதிநிதிகள் இன்று இலங்கை வருகின்றனர்.

ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடிய சூழ்நிலைகள் இங்கு நிலவுகிறதா என்பது தொடர்பாக இவர்கள் ஆராய்வர். [இ-3]

## மேலும் ஆயிரம் பயணிகள் 14 ஆம் திகதி திருமலைக்கு

### இன்று ரிக்கெட் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், பெப். 11

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு ஆயிரம் பயணிகளை 'லங்கா முடித்த' கப்பல் மூலம் எதிர்வரும் 14 ஆம் திகதி அனுப்ப ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சேவையில் செல்ல விரும்புபவர்களுக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து இன்று காலை 10 மணி முதல் ரிக்கெட்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## ஏழாலைப் பகுதியில் படையினர் தேடுதல்

வலி. வடக்கு, பெப். 11

ஏழாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றை அடுத்து படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஏழாலை, குப்பிளான், மயிலணி, சூராவத்தைப் பகுதிகளிலேயே தேடுதல்கள் நடத்தப்பட்டன.

பொதுமக்களை வீடுகளில் இருந்து வெளியேற வேண்டாம் என்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு நேற்று முன்தினம் இரவு 7.00 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8.00 மணி வரை தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை இல்லாதவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இப்பகுதிப் பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவு குறைவாகவே இருந்தது. (இ-86-152-133)

### எம்பிலிப்பிட்டிய கொலை:

## 6 படையினர், அதிபருக்கு கடூழிய சிறைத் தண்டனை

கொழும்பு, பெப். 11

தெற்கில் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் கொலை தொடர்பான வழக்கில் குற்றவாளிகளான 6 படையினருக்கும் மற்றும் பாடசாலை அதிபருக்கும் கடூழியச் சிறைத் தண்டனைகளை விதித்து இரத்தினபுரி உயர் நீதிமன்ற நீதிபதி சந்திரதாச நாணயக்கார நேற்று தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கில் குற்றவாளிகள் என்று நிருபிக்கப்பட்ட எம்பிலிப்பிட்டிய மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### செம்மணி புதைகுழி விவகாரம்:

## வெளிநாட்டு சட்ட வைத்திய நிபுணர் சேவையைப் பெற அரசு அனுமதி

செம்மணியில் மனித புதைகுழி தோண்டுவதற்கு யாழ். நீதிமன்றம் அனுமதி வழங்கும் போது, அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுசட்ட வைத்திய நிபுணர்களை சேவையில் ஈடுபடுத்த இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதைகுழி தோண்டும் நேரத்தில் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அங்கு விவரங்களைச் சேகரிக்க அனுமதிப்பது என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்

அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (10-02-99) காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பத்மலோஜினி மற்றும் சுப்புலட்சுமி, சற்குணம், மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பொன்னுத்துரை (முன்னாள் ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), செந்தில்நாதன் (சவூதிஅரேபியா), சிவமூர்த்தி (கொழும்பு), கதிரவேல் (இலங்கை வங்கி, மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சரவணை கந்தசாமியின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.02.99) கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
**அ.த. கதிரவேல்**
(மருமகன்)

அம்மன் வீதி, திருநெல்வேலி.
கொழும்பு முகவரி; A3 F22,
புளுமெண்டால் மாடித் தொடர்,
கொழும்பு - 13. T.P. No. 01-470136
(சி/6457)

## தாவீதுராஜா ஞானவெளிச்சம்

(பிரபல வர்த்தகர் - உரும்பிராய்)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தா. ஞானவெளிச்சம் 09 - 02 - 99 இல் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திரு. திருமதி தாவீதுராஜா ஆகியோரது மூத்த புதல்வரும் திருமதி புஷ்பத்தின் அன்புக் கணவரும், வொட்கின்சன், றொமில்டா, டல்சி ஆகியோரது பாசமிகு தந்தையாரும் ஸ்ரனிஸ்லாஸ் (சுவிஸ்), அருட்செல்வி செபமலர் அ. கா. (அச்சுவேலி), விக்ரோரியா, புஸ்பராணி, றவிநாயகி (சிங்கப்பூர்), யோகராணி (ஆசிரியை, உ. றோ. க த. க பாடசாலை), செல்வநாயகி (ஹற்றன்) ஆகியோரது அன்புச் சகோதரரும், சின்னமலர் (இத்தாலி), பிறேமா (இத்தாலி), கமலா (இத்தாலி), யேசுதாஸன் (இல. மின்சார சபை), மரியநாதன் (கூ. ச. நீர்வேலி), திருச்செல்வம், ஜெயப்பிரகாஷ் (சவூதி) ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு ஆராதனைகள் இன்று (11 - 02 - 99) வியாழக்கிழமை மாலை 3.30 (பு. நே.) மணிக்கு புனித மிக்கேல் ஆலயத்தில் இடம்பெறும்

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ஞா. வொட்கின்சன்**
(மகன்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(62992)

## திருமதி இரத்தினேஸ்வரி இராசையா

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினேஸ்வரி இராசையா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை இராசையாவின் அன்பு மனைவியும் திருமதி பத்மாவதி வேலாயுதபிள்ளை, திருமதி பரமேஸ்வரி சிவசுந்தரத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-02-99) வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
**செல்லத்துரை வேலாயுதபிள்ளை**

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு.
[62988]

## V. M. K. குலேந்திரன்

சாவகச்சேரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குலேந்திரன் 9-2-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற V. M. கணபதிப்பிள்ளை திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளையின் இளைய புதல்வனும் திகழ்மதியின் அன்புக் கணவரும் கார்த்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அபரஜிதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பிரசோதிகா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாக்கியம், ஜெயலட்சுமி, புலேந்திரன், சீதாலட்சுமி (கனடா), ராதாலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), தர்மநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் அதிபர், மீசாலை, விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்) தர்மேந்திரன் (CARE), யோகதாஸன் (பொறியியலாளர்), வசந்தகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-2-99) வியாழக்கிழமை காலை 10. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**V. M. K. புலேந்திரன்**
(சகோதரன்)

டச்சு வீதி,
சாவகச்சேரி.
(62997)

## விலை வேறுபாடு

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சீனியின் விலை 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் ஒரு கிலோ சீனி 35 ரூபாவாக விற்கப்படுகிறது.

(ஐ - 117)

**றோயல்**
சாவகச்சேரி.
98 Day, 99 கணக்கீடு
கம்பனி - கிரயக் க/கு
Tue. - Thu. 2-30 - 4.30
99 - 2000
First in Com-
கணக்கீடு
Tue. - Thu. 1-30
by: கொலின்
2000, 2001
கலை - வர்த்தகம்
நடைபெறுகின்றது.
- இயக்குநர்
(62998)

## NOTICE

UNICEF
Jaffna Office
Will be Closed From
12 - 02 - 99 Until
25 - 02 - 99
Due to Workshop in
COLOMBO
(சி/6456)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
**காதல் கோட்டை**
இன்று காட்சிகள்
10-30, 2-30
(சி/6410)

**நாகம்ஸ்**
நெப்போலியன், தேவயானி
நாசர், மணிவண்ணன்
நடித்த
**கிழக்கும் மேற்கும்**
காட்சிகள்: 10-30, 2-30
(63004)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
விஜய் சிம்ரன்
நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
புதிய வெளியீடு
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(62900)

**சிந்துதிரையரங்கம்**
உரும்பிராய்
புதிய வெளியீடு
இன்று
விஜயகாந்த் நடித்த
கள்ளழகன்
காட்சிகள் 10. 30, 3. 30
(62996)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி

(இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

திருநெல்வேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி அவர்கள் நேற்று (10-02-99) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக் கணவரும், இராசநாயகி (இந்திராணி), இரத்தினகுமார் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (வி. எஸ். பி. குறூப், ஜெசீபா ஏஜன்சி பங்காளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதாசன், கமலரஞ்சிதம், வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சதீஸ், தினேஸ், பபிதா, பிரசான், விதுஜா, லக்சுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-02-99) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இல: 797, பலாலி வீதி. **இ. ஜெயக்குமார்** (மகன்)
திருநெல்வேலி. (சி/6458) (V. S. B. குறூப்)

## சிதம்பரப்பிள்ளை கந்தப்பு

கரணவாய் கிழக்கு, புட்டணி கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கந்தப்பு (09. 02. 99) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இலச்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவரும், கதிரவேலு (வடபிராந்திய போக்குவரத்துச்சபை, பருத்தித்துறை), கிருஷ்ணர் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), சிவகுரு (மத்திய மின்சார நிலையம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்) ஆகியோரின் தகப்பனாரும், சிவகாமி, பாக்கியம், சௌகுந்தலா ஆகியோரின் மாமனாரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரணவாய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் புதன்கிழமை (10 - 02 - 99) நேற்று பிற்பகல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவகுரு**
(மகன்)

கரவெட்டி. (63009)

## சபாரத்தினக்குருக்கள் பொன்னம்மா

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த ச. பொன்னம்மா நேற்று 10. 02. 99 இல் காலமாகிவிட்டார்.

இவர் செல்லப்பிள்ளையார் கோவிலடி மட்டுவில் வடக்கு, காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் — தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், இராமச்சந்திரஐயர் (ஒய்வுபெற்ற வீடமைப்பு திணைக்கள உத்தியோகத்தர்), பரமேஸ்வரி, புவனேஸ்வரி, மகேஸ்வரி, விமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்தானலெட்சுமி, லோகேஸ்வரசர்மா, சோமசுந்தரஐயர் (G. M, வடமராட்சி ஐக்கிய வியாபாரச் சங்கம்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு இன்று 11-02-99 மேற்படி விலாசத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 1 மணிக்கு தகனக்கிரியைக்காக குடும்பமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சோ. லோகேஸ்வரசர்மா**
கொழும்புத்துறை. (மைத்துனர்) (63006)

## திருமதி இரத்தினம்மா சிவசுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம்மா சிவசுப்பிரமணியம் 10-2-99 நேற்று புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம் [சுன்னாகம், ப. நோ. கூ. சங்க கிளை 11, தாவடி, முகாமையாளர்], இராஜேஸ்வரி பரமேஸ்வரலிங்கம் [பிரான்ஸ்], ஜெகதீஸ்வரி, இராசலிங்கம், சிவதாஸ் [பிரான்ஸ்], இரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பற்குணராஜா [லிங்கம் தொலைத் தொடர்பு சேவை, தாவடி], திருநாவுக்கரசு [கொழும்பு, றெஸ்ரோறன்ற்- யாழ்ப்பாணம்], சகுந்தலாதேவி, பத்மா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் குகேசன், அனுஷா, விஷ்ணுஜன், பிரணவி, சனர்த்தனன், சனோஜன், ரசிகா, கஜன், பிரசாந், பத்மலோஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மனோன்மணி, சுகிர்தலட்சுமி காலஞ்சென்ற ஆறுமுகதாஸ் [தபாலதிபர்], சற்குணதேவி [கனடா] தியாகராசா [சுவிஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [11-2-99] வியாழக்கிழமை பி.ப 2 00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**சி. தர்மகுலசிங்கம்**
[மகன்]

நெல்லொரு பருதிப் பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
[63014]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் வாஜ்பாய் 20 ஆம் திகதி
# பஸ் மூலம் பாகிஸ்தான் செல்கிறார்

புதுடில்லி, பெப். 11
இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் எதிர் வரும் 20 ஆம் திகதி பாகிஸ் தானுக்கு வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள் ளார்.

புதுடில்லிக்கும் பாகிஸ்தா னின் எல்லை நகரமான லாகூருக்கும் இடையே ஆரம் பிக்கப்பட்டுள்ள தரைவழி யான பஸ் போக்குவரத்து சேவை மூலம் வாஜ்பாய் அங்கு செல்லவுள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த பஸ் பயணத்துக்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்ற னர்.

லாகூர் செல்லும் வாஜ் பாயை அங்கு வைத்து பிரத மர் நவாஸ் ஷெரீப் வர வேற்பார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

ஏற்கனவே வெளிநாடு களில் மட்டும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள இருபிர தமர்களும் பாகிஸ்தானில் சந்திக்க இருப்பது இதுவே முதல் முறையாகும். காஷ் மீர் விவகாரம் உட்பட இரு தரப்பு விடயங்கள் குறித்து ஷெரீப்புடன் பேசுவதற்கு வாஜ்பாய் விருப்பம் தெரி வித்துள்ளார்.

பிரதமர் வாஜ்பாயை ஏற் றிச் செல்லும் பஸ்ஸில் நவாஸ் ஷெரீப் புதுடில்லிக்கு வருவார் என எதிர்பார்க்கப் படுவதாகஇஸ்லாமாபாத் வட் டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—
வாஜ்பாயின் பாகிஸ்தான் விஜயம் குறித்து இந்து அடிப் படைவாத சிவசேனைக்கட்சி கடும் ஆட்சேபம் தெரிவித்து வருகிறது. (ஐ-க)

## இந்தோனேசியாவில்
## படகு கவிழ்ந்து 300 பேர் மூழ்கினர்

ஜகார்த்தா, பெப். 11
இந்தோனேசியாவின் கரைக்கு அண்மையில் பெரிய படகு ஒன்று கவிழ்ந்ததில் முன்னூறுக்கும் அதிக மானோர் நீரில் மூழ்கி விட்ட தாக அஞ்சப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை கலி மந்தானில் இருந்து சுமத்திரா தீவிற்குச் சென்ற படகே விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் அப் படகில் பயணம் செய்த பத் தொன்பது பேரைப் பொருள் கள் ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று காப்பாற்றியதை அடுத்தே மேற்படி படகு விபத்துக்குள்ளானது தெரிய வந்தது.

படகு விபத்துக்குள்ளா னது தொடர்பான காரணம் எதுவும் இதுவரை தெரிய வரவில்லை.

(ஐ-க)

## கிளின்ரன் பதவி நீக்கம் குறித்து ரகசிய விவாதம்

அமெரிக்க அதிபர் கிளின் ரனைப் பதவியில் இருந்து நீக் குவது தொடர்பாக இரகசி யமான விவாதம் நடைபெறு கின்றது.

கிளின்ரனைப் பதவி நீக்கம் செய்வது தொடர்பாக பகி ரங்க விசாரணை நடத்துவ தற்கு செனட்டில் வாக் கெடுப்பு நடைபெற்றபோது மூன்றில் இரண்டு பெரும் பான்மை கிடைக்காததை அடுத்தே இரகசிய விவாதம் நடைபெறுகின்றது.

முன்னாள் வெள்ளை மாளிகை அந்தரங்கச் செய லாளர் மொனிக்கா லுவின்ஸ் கியுடன் முறைகேடான உறவு வைத்திருந்தது தொடர்பாக பொய்ச் சாட் சியம் அளித்தது மற்றும் நீதித் துறை நடவடிக்கைகளைத் தடுத்தது போன்ற குற்றச் சாட்டுக்களின் பேரில் கிளின் ரன் மீது குற்றப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டு விவா திக்கப்பட்டு வருவது தெரிந் ததே.

(ஐ-க)

உலக அரங்கில்

## கொங்கோவில் விமான விபத்து

கொங்கோவில் உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று நேற்று முன் தினம் நண்பகல் தரையில் வீழ்ந்து நொருங்கியது.

அதில் பயணம் செய்த 8 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை. (இ-7)

## கொசோவோ பேச்சில் தடங்கல்

பாரிஸில் நடைபெறும் கொசோவோ சமாதானப் பேச்சுக்களில் தடங்கல் ஏற் பட்டிருப்பதாகப் பாரிஸில் இருந்து வெளிவரும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

பேச்சுக்களில் தடங்கல் ஏற் பட்டதை அடுத்து பிரிட்டிஷ், பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர்கள் கொசோவோ விடுதலை ராணுவத்தின் பிரதிநிதிகளையும் யூகோஸ் லாவிய அரச தரப்புப் பிரதி நிதிகளையும் சந்திக்க உள்ள னர்.

சமாதானப் பேச்சுக்கள் தோல்வி அடைந்தால் யூகோஸ்லாவியா மீது தாக் குதல் நடத்தப்போவதாக நேட்டோ மீண்டும் எச்சரித் துள்ளது.

சமாதானப் பேச்சை ஆர பிப்பதற்கு நேட்டோ காலம் கெடு விதித்ததை அடுத் பேச்சுக்கள் ஆரம்பமானது தெரிந்ததே. (இ)து

## வகுப்பறைக் கட்டட திருத்த வேலை தாமதம்

வடமராட்சி, பெப். 11
பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் கல்லூரி வகுப்பறைக் சட்டடத்திருத்த வேலைகளை தாமதமின்றித் பூர்த்தி செய்யுமாறு பாட சாலை அபிவிருத்திச் சங்கம் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரையும், திருத்த வேலைக்குப் பொறுப்பான ஒப்பந்தக் காரரையும் கேட் டுள்ளது.

பத்து லட்சம் ரூபாசெலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்லூரி வகுப்பறைக் சட்டட திருத்த வேலைகள் மிகத் தாமதமாக நடைபெற்று வருவதனால்மாணவர்களுக்கு வகுப்பறை வசதியீன்மை ஏற்பட்டுள்ளதுடன் மாணவர் கள் கல்வியைத் தொட.ரமுடி யாது சிரமப்பட்டு வருகிறார் கள்.

மாணவர்களின் கல்வி பாதிக்காமல் இருக்க வகுப் பறைக்கட்டட திருத்த வேலைகளை விரைவாக முடித்து உதவுமாறு அக் கோரிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## பளையில் மாபெரும் கலை விழா

யாழ்ப்பாணம், பெப். 11
பளை பிரதேச செயலக கலை கலாசார பிரிவினர் நடத்தும் கலை விழா நாளை முதல் மூன்று நாள்கள் பளை யில் நடைபெறவுள்ளது.

மூன்று நாள்களும் காலை 9-30மணிக்கு இந்த விழா ஆரம்பமாகும். முதல் நாள் நடைபெறும் கிராமிய கலை விழாவில் காலை நிகழ்வுக்கு திரு-இ. நாகேந்திரம்தலைமை வகிப்பார். பிரதம விருந் தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். மாலை நிகழ்வு கிராம சேவை உத்தி யோகத்தர் சி. பாலசுந்தரம் தலைமையில் ஆரம்பமாகும், பிரதம விருந்தினராக மாகாண இணைப்பாளர் ஏ. ஸி. செபநாயகம் கலந்து கொள்வார்.

இரண்டாம் நாள் நடை பெறும் இசைவிழாவின் காலை நிகழ்வு பளை மத்திய கல்லூரி அதிபர் க. குணபால சிங்கம் தலைமையில் ஆரம்ப மாகும். பிரதம விருந்தின ராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா கலந்து கொள்ள வுள்ளார்.

பளை வேம்பொடுகேணி சி. சி. த. பாடசாலை அதி பர் சி. இராமலிங்கம் தலை மையில் ஆரம்பமாகும். மாலை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கணபதிப்பிள்ளை கலந்து கொள்கிறார்.

மூன்றாம் நாள் நிகழ்வாக நாடக விழா காலையில் பளை ப நோ. கூ. சங்க தலைவர் சி, சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கூட்டு றவு அபிவிருத்தி உதவிஆணை யாளர் கு. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை நிகழ்வு பளை பச் சிலைப்பள்ளி பிரதேச செய லர் அ. புத்திசிகாமணி தலை மையில் இடம் பெறும். இந் நிகழ்வின் பிரதம விருந்தின ராக மாவட்ட செயலக திட் டப் பணிப்பாளர் க. [illegible] லிங்கம் கலந்து கொள்ளவுள் ளார்.

(ஐ-5)

## 'யுனிசெவ்' உதவி

வலிகாமம் தெற்கு, பெப். 11
ஏழாலை, குப்பிளான், சுன் னாகம், இணுவில் போன்ற கிராமங்களில மீளக் குடிய மர்ந்த குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனததால் பல பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

மேற்படி கிராமங்களில் அந்தக் கிராம சேவையாளர் கள் மூலம் தெரிவு செய்யப் பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் இருநூறு குடும்பங்களுக்கு அவசியமான சமையற் பாத்திரங்களும் ஆயிரம் பாய்களும் நிறுவனத் தால் வழங்கப்பட்டன.

(ஐ-152)

## 'சதோச வில்' பொருள்கள் இல்லை

வடமராட்சி, பெப். 11
பருத்தித்துறையில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் (சதோச) உண வுப் பொருள்களுக்கு தட்டுப் பாடு நிலவுகிறது.

அத்தியாவசியப் பொருள் களில் சீனியும், லக்ஸ் சவர்க் காரமும் மட்டுமே உள்ளன. கையிருப்பில் சீனி போதிய ளவு இன்மையால் ஒருவருக்கு மூன்று கிலோ சீனி மாத் திரமே வழங்கப்படுகிறது. இதன் விலை கிலோ 33ரூபா 50 சதமாகும். (ஐ-173)


## Jaffna District Basketball Association
## Awards for the Year 1998

The Most Valuable Player of the year
Men: MR. J. JUDE WALTON
Women: MISS S. SURENTHINI

### Team Ranking According to the Performance in the year 1998.

MEN:

| RANK | TEAM |
|---|---|
| 1. | University Golds |
| 2. | Patrician S. C. |
| 3. | Centralite S. C. |
| 4. | Utha yan S. C. |
| 5. | Old Golds S. C. "A" |
| 6. | Jaffna Johnians |
| 7. | University Blues |
| 8. | St. Xaviers S. C. |
| 9. | Old Golds S. C. "B" |
| 10. | Independent S. C. |
| 11. | Gold stars S. C. |

WOMEN:

| RANK | TEAM |
|---|---|
| 1. | J / University |
| 2. | Familians S. C. |
| 3. | Ariyalai United S. C. |
| 4. | Youth Carmel S. C. |
| 5. | Jollystars S. C. |
| 6. | Ceico Disco S. C. |

(62991) SECRETARY.



## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 13 - 03 - 1955



உதிர்வு 09 - 02 - 1999

### V. M. கணபதிப்பிள்ளை குலேந்திரன்

09 - 02 - 99 இல் காலமான V. M. குலேந்திரன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை யாக்குவதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

சு மார்க்கண்டு (பாலன்)
வான்மதி நகையகம்,
சாவகச்சேரி.

(62999)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
பொ. யசிதரனின்
தந்தையார்
### சி. பொன்னுத்துரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னா ரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள்,
மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(62993)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வி கதிரவேலு மாலினி (சுவாமி அம்மன் கோயிலடி, காரைநகர்) ஆகிய எனது தேசிய, விசேட (091304495) அடையாள அட்டைகள் ஊர்காவற்றுறையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சக்தி ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

(62980)

தட்டாதெருச் சந்திக்கும் கன்னாதிட்டி சிவன் கோயிலுக்கும் இடையில் 'நீலநிறக் கோட்' அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கணேசன் ஸ்ரோர்ஸ் அல்லது சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ். நகர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(62968)

நாகலிங்கம் இராசகுரு (தேசிய அடையாள அட்டை இல. 462371780V), 407, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை எனும் முகவரியுடைய அடையாள அட்டை கடந்த 31. 01. 99 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நா.இராசகுரு, (G M) கலாசாலை வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் (62965)

## மலர் வெளியீடு

இணுவில் மத்திய கல்லூரியினரின் 'மத்திய தீபம்' என்னும் மலர் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் துரை. எங்கரசு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ-30)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை றோட்டில் சிவப்பிரகாச மகா வித்தியாலத்துக்கு முன்பாக கிணற்றுடன் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு : சி. இராசரத்தினம், புனித வாசா, தும்பளை, பருத்தித்துறை.

(சி/6439)

### தவறிவிட்டது

சுப்புசாமி செந்தில்நாதன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0902022381) கடந்த 06.02 99 அன்று கல்வியங்காட்டில் இருந்து புத்தூர் ஊடாக நவக்கிரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சத்தியா அன் கோ, 22, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(62967)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன்

**அமரர் கி. ராஜ்குமார்**

( ஆசிரியர் )

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு துயரமடைந்திருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

செல்வநாயகம் யசோகன்
வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம்

(62608)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**திருமதி வயிரவப்பிள்ளை சின்னம்மா**

12-01-99 அன்று மன்னாரில் காலமான திருமதி வயிரவப்பிள்ளை சின்னம்மா அவர்களின் மரணச் செய்திகேட்டு எமது துயரத்தில் பங்குகொண்டு ஆறுதலளித்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(சி - 6450)

# மன்னரின் மறைவுக்குப் புளொட் அனுதாபம்

புற்றுநோயினால் மரணமான ஜோர்தான் மன்னர் ஹுசேய்னின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து புளொட் அமைப்பின் தலைமை அலுவலகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னர் ஹுசேய்னின் மறைவையிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை அந்நாட்டு மக்களுக்கும், ஜோர்தான் அரசாங்கத்துக்கும் தெரிவித்துக் கொள்கின்றது.

அதேவேளை ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் அவர்கள் வளைகுடாப் பிராந்தியத்தில் அடிக்கடி ஏற்பட்ட அரசியல், யுத்தம் போன்ற பதற்ற நிலைமைகளைத் தணித்து வளைகுடாவில் அமைதியும், சமாதானமும் நிலவ அயராது உழைத்தவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மன்னர் ஹுசேய்ன் பலஸ்தீன போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியதுடன் அங்கு சமாதானம் ஏற்பட ஆர்வம் கொண்டவராகச் செயற்பட்டார்.

மத்திய கிழக்கில் சமாதானம் நிலவ வேண்டும் என்பதற்காக முன்னின்று செயற்பட்டவரும் மன்னர் ஹுசேய்னே.

இவர் அரபு நாடுகளுக்கும்—இஸ்ரேல் அரசிற்குமிடையில் சமாதான ஒப்பந்தம் செய்வதில் முன் நின்றவர். மன்னரின் இழப்பானது மத்திய கிழக்கு நாடுகளுக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். (ஐ-7)

## மாநாட்டு மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 11

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் திறப்பு விழா இம் மாதம் 19 ஆம் திகதி பிரதேச செயலர் அ. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகேயும், பொது முகாமையாளர் எல். வாமதேவனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-5)

## Jaffna District Basketball Association Exhibition Match & Awards Ceremony - 1998

GUESTS OF HONOUR

**H. E. Dr. Hans Dietrich Von Bothmer**
( Deputy Ambassador of Germany )
&
**Mr. Eberhard Halbach**
( Team leader GTZ — JRP )

Date: 11 - 02 - 1999.
Time: 5. 00 p. m.
Venue: UNIVERSITY OF JAFFNA.

Sports enthusiasists are cordially invited.

President & Members
J. D. B. A

(62990)

## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

# கேள்வி அறிவித்தல்

இதன் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட
கேள்விகள் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்
களை கீழே வேலை ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்படும் கேள்விப் பத்திரப்
பணத்தையும், மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்தி
யதன் பேரில் 23—02—99 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிவரை சாவகச்சேரி
பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் பூரணப்படுத்
தப்பட்ட கேள்விப் பத்திரங்களை அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை
"செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்னும் முகவரிக்கும்
இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்
தெரு, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலமோ அல்லது
அதற்கென வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ 25—02—99 ஆம் திகதி காலை
11-00 மணிக்கு முன்பு சேர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் 26—02—99 ஆம்
திகதி காலை 10-30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்கள்
கேள்விச் சபையில் சமுகம் கொடுக்கலாம். கேள்விகளை அனுப்பும் கடித உறை
யின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன வேலைக்கான கேள்வி என தவறாது
குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேசசபை தலை
மைப் பணிமனையிலும், உப பணிமனைகளிலும் அலுவலக நேரங்களில் அறிந்து
கொள்ளலாம்.

| | வேலையின் பெயர் | வைப்புப் பணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | கொடிகாமம் ஆஸ்பத்திரி வீதி, பாலாவி வீதி, இணைப்பு வீதி; | 2,500/- | 500/- |
| 02. | மருதடிப்பிள்ளையார் வீதி, திருத்தவேலை. | 2,500/- | 500/- |
| 03. | மிருசுவில் புகையிரத நிலைய வீதி. | 1,500/- | 400/- |
| 04. | வரணி இயற்றாலை இராச பெருந்தெரு, வீதி வேலை. | 2,000/- | 500/- |
| 05. | அம்பலாந்துறை வயல்வெளி வீதி, | 2,000/- | 500/- |
| 06. | கைதடி வடக்கு வன்னியசிங்கம் வீதி. | 2,500/- | 500/- |
| 07. | கலையாபரண கோட்டை வீதி, | 2,000/- | 500/- |
| 08. | அல்லாரை பாடசாலை வீதி, | 1,000/- | 250/- |
| 09 | மிருசுவில் ஆஸ்பத்திரி வீதி, குழாய்க் கிணறு அமைத்தல் | 750/- | 150/- |
| 10. | நாவற்குழி சந்தி ச. ச. நிலையம் திருத்த வேலை | 500/- | 150/- |
| 11. | வரணிச் சந்தை பொது மலசலகூடம் அமைத்தல் | 500/- | 150/- |
| 12. | ஐவிலணப்பிட்டி மயானமடம் அமைத்தல் (கைதடி தெற்கு) | 1,000/- | 250/- |
| 13. | சரஸ்வதி ச. ச. நிலையம் (நாவற்குழி, கைதடி) திருத்தம். | 500/- | 150/- |
| 14. | கொடிகாமம் பஸ் நிலையத்திருத்த வேலை. | 500/- | 150/- |

செயலாளர்,
தலைவருக்காக
சாவகச்சேரி பிரதேச சபை.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
09—02—1999

(சி/6440)

## அந்தியேட்டி அஞ்சலி

உ



தோற்றம் 01 — 08 — 1950

மறைவு 12 — 01 — 1999

**அமரர் கு. செல்வரத்தினம்**

திதி வெண்பா

மன்னுவெகு தானிய மார்கழி ஏழ் நான்கு செவ்வாய்
உன்னு விசாகம் ஒளிர் அபரம் — தன்னிலுறும்
பூசை ஏகாதசியாம் பொங்குசெல்வ ரத்தினம் போய்
ஈசனடி சேர்ந்த இரவு.

சீர் வளரும் சுன்னாகப் பதியின் வாசன்
திருவளரும் சிவதொண்டன், இறைவன் கீர்த்திப்
பேர் வளரும் பஜனை முதல் தெய்வத் தொண்டு
பேணி வரும் பெரும் பணிகள் படைத்த செல்வன்,
பார் வளரும் கொடை நெஞ்சன், பக்தி வெள்ளப்
பயன் வளரும் செல்வரத் தினப்பேர் நண்பன்,
மார்கழியில் மண்ணீத்து விண் புகுந்தான்
மருவுமவன் சீவான்மா பெறுக சாந்தி!

அன்பன் க. புவனேந்திரநாதன்.

(சி/6448)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 FEB 1999
யாழ்ப்பாணம் … மன்றம்

உள்நாட்டவர் உதவியுடன் இலங்கையில்

# பாலியல் துர்நடத்தையில் நாளாந்தம் 100 சிறுவர்கள்

கொழும்பு, பெப். 11

இலங்கையில் நாள் ஒன்றுக்கு சுமார் 100 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்; இதற்கு வெளிநாட்டவர்கள் மட்டுமன்றி இலங்கையர்களும் காரணமாக இருக்கின்றார்கள்.

'பீஸ்' என்ற சுற்றாடல், குழந்தைகள் பாதுகாப்பு ஸ்தாபனம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது—

இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்கள், மலைப்பிரதேசங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த 10 ஆயிரம்முதல் 15 ஆயிரம்வரையான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 8 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களாவர்.

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் இருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளால் இவர்களில் பெரும்பாலானோர் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அதிகார பூர்வ வட்டாரங்களின் அனுசரணையுடன் உள்ளூர் முகவர்களின் உதவியைப் பெற்று சர்வதேசக் குழுக்கள் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தி வருகின்றன. இந்தக் குழுக்கள் மூலம், சிறுவர்கள் விபச்சாரத்துக்கும், பாலியல் படங்கள் எடுபதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

உள்நாட்டவர்களால் பெரும்பாலும் சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகின்றார்கள். பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கவோ ஆலோசனை வழங்கவோ வசதிகள் எதுவும் இல்லை. பாதிக்கப்பட்ட குழந்தைகள் சமூகத்தால் ஒதுக்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை வெளியிடுவதற்கான ஆய்வுகளை 'பீஸ்' ஸ்தாபனம் வடக்கு—கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் நடத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது,

(ஐ-6)

## சாரதி தாக்கப்பட்டார்!

## மன்னார் பஸ் ஊழியர் திடீர் வேலை நிறுத்தம்

வவுனியா, பெப். 11

மன்னார் பஸ் டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

மன்னாரில் இருந்து கடந்த திங்கள் வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று உயிலங்குளம் பகுதியில் முன்னால் வந்த படையினரின் மோட்டார் சைக்கிளுக்கு இடம் கொடுப்பதற்காக ஒதுங்கிய போது வீதியில் தேங்கிக் கிடந்த சேற்றுத் தண்ணீர் பஸ் டயரால் வீசிறப்பட்டு அவர்களை நனைத்ததாகவும் —

அதையடுத்து பஸ்ஸின் சாரதி பஸ்ஸை விட்டு இறக்கப்பட்டுத் தாக்கப்பட்டதாகவும் —

கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படையினரின் தாக்குதலைக் கண்டித்தே மன்னார் டிப்போ ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தலையிட்டு, அளித்த உறுதி மொழியை அடுத்து நண்பகல் அளவில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. [உ-3-164]

## சிகிச்சைபெற்றுத்திரும்பிய நபர் கப்பலில் மரணம்

கொழும்பில் மேலதிக சிகிச்சைக்குச் சென்று சிகிச்சை முடிந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் யாழ். திரும்பியவர் அந்தக் கப்பலிலேயே மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மேலதிக சிகிச்சை பெறுவதற்காக உரும்பிராயைச் சேர்ந்த தேவதுரைராஜா ஞானவெளிச்சம் [வயது 55] என்பவர் கடந்த டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி கொழும்பு சென்றிருந்தார்.

சிகிச்சை முடித்த இவர் திருகோணமலையில் இருந்து கடந்த திங்கள் காங்கேசன்துறை நோக்கி வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் பயணம் செய்தார்.

காங்கேசன்துறைக்கு கப்பல் வந்து சேரமுன்னர் இடைவழியில் அவர் மரணமானார்.

அதே நேரம்—

இக்கப்பல் திருமலையில் புறப்படத் தயாரான போது கப்பலில் பயணம் செய்யவிருந்த ஒருவர் மாரடைப்பால் மரணமானதாகவும்—

அவரது சடலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டது என்றும்—

அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ-3-139)

## விஸ்வகர்ம சங்கத்துக்கு கிளைகள்

நீர்வேலி, பெப். 11

அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கம் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது.

கிராம ரீதியாகவுள்ள மேற்படி மக்களின் விவரங்களைத் திரட்டுவதோடு கிராம ரீதியாகக் கிளைகளையும் நிறுவி பல தரப்பட்ட சவைகளையும் மேற்கொள்ள வேண்டுமென அண்மையில் கைதடி சைவச் சிறுவர் இல்ல மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சங்கப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டதோடு சமூக ஒற்றுமை, கட்டுப்பாடு என்பன பேணப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

கிராம ரீதியாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு சங்கம் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது. விரைவில் கிராம ரீதியாக அங்கத்துவப் பட்டியல் தயாரிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

(ஐ-110)

## சீனி விநியோகம்

உரும்பிராய், பெப்.11

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பங்கீட்டு அடிப்படையில் சீனி விநியோகிக்கப்படுகிறது.

'உ' அட்டைக்கு 2 கிலோ வீதமும் 'அ' 'இ' அட்டைகளுக்கு ஒரு கிலோ வீதமும் சீனி வழங்கப்படும். இதன் விலை கிலோ 30 ரூபாவாகும்.

(ஐ-154)

## வீதியோரக் கடைகளை அப்புறப்படுத்த உத்தரவு

வலிகாமம் தெற்கு, பெப். 11

சுன்னாகம் பிரதேச சபை எல்லையில் உள்ள பிரதான வீதி ஓரங்களில் அனுமதி இன்றி அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளை விரைவில் அப்புறப்படுத்துமாறு பிரதேச சபை அறிவித்துள்ளது.

இக் கடைகளால் வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் ஏற்படுவதுடன் வீதி விபத்துக்கள் ஏற்பட வழி சமைப்பதாகவும் முறையிடப்பட்டதை அடுத்தே கடைகளை அப்புறப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-152)

## தபால் ஊழியர்களுக்கு சீருடை பெற முயற்சி

அரியாலை, பெப். 11

யாழ். மாவட்ட தபால் விநியோக ஊழியர்களுக்கான சீருடைகளைத் தருவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள தபாலக ஊழியர்களுக்குச் சீருடைகளை அனுப்பி வைக்குமாறு கொழும்பில் உள்ள மத்திய தபாலகத் தலைமை அலுவலகத்தைத் தாம் கேட்டிருப்பதாகவும் பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

கடந்த 1987ஆம்ஆண்டுக்குப் பின்னர் மாவட்ட தபால் விநியோக ஊழியர்களுக்குச் சீருடைத் துணிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

## கொற்றாவத்தைப் பாடசாலை மாடிக் கட்டடம் திறப்பு

நெல்லியடி, பெப். 11

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால் 63 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் பாடசாலை மாடிக் கட்டடம் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு இலங்கைக்கான ஜேர்மன் பிரதித் தூதுவரால் திறந்து வைக்கப்படும்.

பாடசாலை அதிபர் பா. வெற்றிவேல் தலைமையில் நடைபெறும் இத் திறப்பு விழாவில், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன யாழ். வதிவிடப் பிரதிநிதி, வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி பிரதேச செயலர் உட்பட இன்னும் பலர் கலந்து கொள்வார்கள்.

(ஐ-109)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

### அமரர் கு. செல்வரத்தினம்

(உதவித் தபாலதிபர்)

மானிப்பாய் தபாலக உதவித் தபாலதிபராகக் கடமையாற்றி 12-01-99 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த குட்டித்தம்பி செல்வரத்தினம் அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

**உத்தியோகத்தர்கள்,**
**உப தபாலதிபர்கள், ஊழியர்கள்.**

தபாலகம்.
மானிப்பாய்,

(62913)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

எழுதுமட்டுவாள் தெற்குப் பிரிவு கிராம அலுவலர்
பொ. நவரத்தினராசா அவர்களின்
அன்புத் தந்தையார்

### செல்லையா பொன்னுத்துரை

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


**பிரதேச செயலக ஊழியர்கள்,**
**நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.**

பிரதேச செயலகம்,
சாவகச்சேரி.

(சி/6425)

## 41-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
19
—
06
—
1953



உதிர்வு
02
—
01
—
1999

அமரர்

### கந்தசாமி சுந்தரலிங்கம்

எம்மை விட்டுப் பிரிந்து
நாற்பத்தொரு நாள்கள் சென்றாலும் — எம்
நினைவுகள் என்றும் உங்களோடு.
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்**
**நண்பர்கள்.**

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(62928)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரியின் இலிகிதர்
செல்வி ஸ்ரீபவானி
அவர்களின் தந்தையார்
அமரர்

### சுந்தரம் செல்லத்துரை

அவர்களின் மறைவினால் துக்கத்தில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**ஊழியர்கள்.**

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி/6446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 29 – 01 – 1949

மறைவு 12 – 01 – 1999

அமரர்

### முத்து சின்னத்துரை
(சின்னராசா)

அன்பின் இருப்பிடமே
அறிவின் பொக்கிஷமே
அன்பாலும் பண்பாலும்
அரவணைத்த- எம் தெய்வமே
கவலைதனை மறந்திடவே
கதைகள் பல சொல்லிடுவாய்- இன்று
கலங்கியே நிற்கின்றோம்
கலிதீர்க்க வாராயோ
உம்பரில் உன் ஆத்மா
உயர்வுடனே சாந்தி பெற
இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்-

கொண்டலடி,
நல்லூர். (62958)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 09 – 10 – 1939

மறைவு 13 – 01 – 1999

### திருமதி இரஞ்சிதபூரணி கோபாலகிருஷ்ணன்

(மக்கள்வங்கி யாழ். பிராந்தியத் தலைமையக ஒய்வு பெற்ற அந்தரங்கக் காரியதரிசி)

மாதமொன்று சென்றும் ஆறவில்லை எம் துயரம்
கூடியிருந்து அரவணைத்து ஆறுதல் சொல்ல
விடைதந்து அன்புடன் வரவேற்க
அம்மா! நீயின்றி ஏங்குகின்றோம் ஏதிலிகளாய்
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றதேனோ நீ
தவிப்பினூடே பிரார்த்திக்கின்றோம்
உன் ஆத்ம சாந்திக்கு.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

13 – 01 - 99 இல் சிவபதமடைந்த எம் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியும், இரங்கலுரை நிகழ்த்தியும், மலரஞ்சலி செலுத்தியும், அனுதாபச்செய்தி அனுப்பியும், இறுதிச்சடங்கு ஒழுங்குகளை மேற்கொண்டும், நாம் கலங்கியிருந்த வேளை எமக்குப் பக்கபலமாக இருந்து இன்னோரன்ன உதவிகளையும் செய்து எமது துயரத்தில் பங்கு கொண்ட நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம், யாழ். போதனா வைத்தியசாலை 24 ஆம் வாட் ஊழியர்கள், வைத்தியர்கள், வடபிராந்திய மக்கள் வங்கி நிர்வாகம் சக முன்னாள், இந்நாள் பணியாளர்கள், யாழ்.மாவட்ட வங்கியாளர்சங்கம், வட மாகாண வங்கி ஒய்வூதியர் சங்கம் யாழ்.பரி.யோவான் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர் தலைவர்கள், மாணவர்கள், யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாண வட்ட லியோ கழகம், யாழ் மாநகரசபை சித்த மருத்துவப் பிரிவு, நல்லூர், முருகன் சனசமூக நிலையம், நல்லூர், செட்டித்தெரு வாழ் நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நன்றி கூற முடியாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.

அ. கோபாலகிருஷ்ணன் (கணவன்)
கோ. கோபிகிருஷ்ணா (மகன்)
சகோதர, சகோதரிகள்.

51/7, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (62869)

## பாடப் புத்தகம்

நெடுந்தீவு, பெப். 11

நெடுந்தீவுப் பாடசாலைகளில் ஆண்டு ஆறு பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் உரிய முறையில் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-111)

## ஆய்வு கூடம் திறப்பு

வலி. தெற்கு, பெப். 11

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் புதிய ஆய்வு கூடம் நாளை வெள்ளி பிற்பகல் 2.30 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

அன்றைய தினத்தன்று அங்கு கண்காட்சி ஒன்றும் நடைபெறும்.

புதிதாகக் கட்டப்பட்ட புதிய நீர்த் தாங்கியிலிருந்து நீர் விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் வைபவமும் அன்று இடம்பெறும்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசா கலந்து கொள்வார்.

(ஐ-152-ரீ)

## பரீட்சைகள் பற்றிய சுற்றறிக்கை

திருநெல்வேலி, பெப். 11

சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சைகள் நடத்தப்படும் திகதிகள், அவற்றுக்கு விண்ணப்பிக்கும் திகதிகள் ஆகிய விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களுக்கும் இச் சுற்றறிக்கை அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## சேவைக்கால கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, பெப். 11

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் உடற்கல்விப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை மேற்படி கருத்தரங்கிற்கு தவறாது சமுகமளிக்குமாறும் இரு கரபந்தாட்ட வீரர்களையும் கரப்பந்துடன் அனுப்பி வைக்குமாறும் பாடசாலை அதிபர்களுக்கு கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## தேவை

ஆங்கிலத்திலும், தமிழிலும் தேர்ச்சி பெற்ற தட்டெழுத்தாளர் தேவை. கடிதங்களை சுயமாகவே தயாரிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும்.

மே/ பா உதயன்
இல. 843,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(62981)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் (கல்வியாண்டு) - 1997

1. இசைக்கலைமாணி பகுதி II & III
2. நாட்டியக் கலைமாணி பகுதி II & III
3. மிருதங்கக் கலைமாணி பகுதி II & III
4. வயலின் கலைமாணி பகுதி II & III
5. வீணைக் கலைமாணி பகுதி II & III

மேற்குறிப்பிட்ட பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த விண்ணப்பங்கள் யாவும் 05 - 03 - 1999 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

★ மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே நடைபெறும்.

- பதிவாளர்

### வெளிவாரிப் பட்டப்படிப்புப் பதிவு 1998 / 99

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1998 / 99 கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 15 - 06 - 1999 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற்கற்கை நெறி
3. பொதுக்கலைமாணி பகுதி I
4. சிறப்புக்கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I
6. இசைக்கலைமாணி (முதலாம் வருடம்)
7. இசைக்கலைமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி பகுதி I கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ். நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| | ரூபா |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 15 - 00 |
| பாடத் திட்டமும் விதி முறைகளும் (முதற்கலை / முதல் வர்த்தக நெறிக்கானது) | 35 – 00 |
| பாடத் திட்டம் (சிறப்புக் கலைமாணி, வர்த்தகமாணி பகுதி 1 பாடநெறிக்கு) | 50 - 00 |
| பாடத் திட்டம் (பொதுக்கலைமாணி பகுதி 1 ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும்) | 15 - 00 |
| விதிமுறைகள் — கைந்நூல் (சகல பகுதி 1 பாடநெறிகளுக்கும்) | 25 - 00 |

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியை / கற்க விரும்பும் பாடங்களைக் குறிப்பிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 11 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ. மீ. அளவுடைய தபால் உறையினை அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு!- 1997 / 98 கல்வியாண்டிற்குப் பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.

(சி-6442)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# கூழாம் பாணி!

உணவு, மருந்து மற்றும் பல அத்தியாவசியப் பொருள்களுக்குக் கடந்த பல நாள்களாகத் தட்டுப்பாடு நிலவுகிறது. பல பொருள்களின் விலைகளும் உயர்ந்து விட்டன.

பாவனைப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் வந்து சேர்வதில் உள்ள தாமதமே இந்தத் தட்டுப்பாட்டுக்கும் விலை உயர்வுக்கும் பிரதான காரணம் என்று சம்பந்தப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய ஒரு நிலை, இவ்வாறு அடிக்கடி உண்டாவதற்கான உண்மையான காரணங்கள் என்ன, பொறுப்பாளிகள் யார் என்பது மக்களுக்குத் தெரியாது. ஒரு சாரார் மறு சாரார் மீது குறை கூறுவதோடும், குற்றஞ் சாட்டுவதோடும் மெதுவாக நழுவி விடுகிறார்கள்.

அரசாங்கம் — அதன் திணைக்களங்கள் — அதன் உயர் அதிகாரிகள் — ஒரு புறமாகவும், கப்பலில் பொருள்களைத் தருவிப்போர் இன்னொரு புறமாகவும், பெரிய வர்த்தகர்கள் வேறு பக்கமாகவும், சிறு வர்த்தகர்கள் இன்னொரு பக்கமாகவும் தத்தமது தரப்புகளைப் பாதுகாக்கவும், நியாயப்படுத்தவும் முயல்கிறார்கள்.

அதனால் இது விவகாரம் ஒரே ''கூழாம் பாணியாக'' எங்கே தவறும் தப்பும் உண்டு, யார், யார் பொறுப்பாளிகள் என்பதனைப் பாவனையாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை; இனங்காண முடியவில்லை. சோடிக்கப்பட்ட காரணங்கள் முன் வைக்கப்படுவதால் உண்மையை, உரியவர்களைக் கண்டு பிடிப்பது கஷ்டமே!

அவ்வாறு தெரிந்தாலும் பொது மக்களால் இவர்கள் மீது நடவடிக்கையா எடுக்க முடியும்? தமது தவறுகளை தப்புக்களைத் தட்டிக்கேட்டுத் தண்டிக்கவோ அல்லது திருந்துமாறு வழிநடத்தவோ எவரும் இல்லை என்ற போக்கில் அவரவர் நினைத்த மாதிரி நடக்கிறார்கள்.

மக்கள் நலன் கருதி நேர்மையுடனும், கண்ணியத்துடனும் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களையும் கண்காணித்துக் கட்டுப்படுத்த எவருமில்லை. அதற்கான கட்டமைப்பும் இல்லை. இந்தக் குறைபாட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனையாது, குடாநாட்டு மக்கள் தமது சகோதரர்கள், அவர்களிடமே ''பணம் பண்ணுகிறோம்'' என நினைத்தாவது இவர்கள் திருந்துவரா?

பாவனைப் பொருள்களுக்குப் பற்றாக்குறை, தட்டுப்பாடு, விலைஉயர்வு வரும் போது மட்டும் ''குய்யோ முறையோ'' என்று வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, கடைக்குக் கடை கூக்குரல் வைக்கும் பாவனையாளர்கள், அவை நீங்கியதும் அதனை மறந்து அடுத்த தடவை வந்த பின்னரே விழித்துக் கொள்கிறார்கள்!

அத்தியாவசிய; மற்றும் பாவனைப் பொருள்களுக்குக் குடாநாட்டில் தட்டுப்பாடும், விலை உயர்வும் அடிக்கடி உண்டாகி மக்கள் கஷ்டப்படும் போது —

குடாநாட்டில் சிவில் நிர்வாகமும், மக்கள் நலத் திட்டங்களும் செவ்வனே செயற்படுவதாகச் சங்கு ஊதுவதால் என்ன பயன்?

இது விவகாரத்தை ஒரு சவாலாக்கிக் கொண்டு தட்டுப்பாடு, விலைஉயர்வுப் பாதிப்பை அரசு நிறுத்துவது எப்போது?

## நல்லூர்ப் பிரிவில்

# நஷ்ட ஈட்டு விண்ணப்பம் கையேற்பது நிறுத்தம்

வலி. வடக்கு, பெப். 11

கடந்த கால வன்செயல்களின் போது வீடுகள் சேதமடைந்தவர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதை நிறுத்திக்கொள்ளுமாறு நல்லூர்ப்பிரதேச செயலகம் கிராம அலுவலர்களைப் பணித்துள்ளது.

ஆயிரத்து 500 ரூபாவுக்குக் கீழ் வருமானம் பெறுபவர்களுக்கு வீட்டுச் சேதத்திற்கென 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இக் கொடுப்பனவு முழுமையான சேதத்திற்கு உள்ளான வீடுகளுக்கே வழங்கப்பட்டு வருகிறது.

பலரின் வீடுகள்சேதமடைந்துள்ள போதிலும் வீட்டுக்குரிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பல சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக காணி உறுதி இல்லாது பலர் காணப்படுகின்றனர். காணி உறுதிகள் கடந்தகால இடப்பெயர்வின் போது தொலைந்துள்ளன.

மற்றும் ஒரு சிலரின் காணி உறுதிகள் அவர்களது சட்டத்தரணிகளிடம் பாதுகாப்புக் கருதி ஒப்படைக்கப்பட்ட போதிலும் உரிய சட்டத்தரணிகள் இங்கு இல்லாமையால் அவற்றைப் பெற முடியவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

(ஐ-86)

# போத்தலில் கள் அடைக்கும் இயந்திரம் பெற முயற்சி

நெடுந்தீவு, பெப். 11

நெடுந்தீவில் போத்தலில் கள் அடைக்கும் தொழில் நிலையத்தை ஆரம்பிக்க பிரதேசசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

கள் அடைக்கும் இயந்திரம் ஒன்றைப் பெறுவதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியை சபை நாடி உள்ளது.

நெடுந்தீவில் மார்ச் தொடக்கம் ஜூன் மாதம் வரை கள் உற்பத்தி அதிகரித்துக் காணப்படும். இக் காலங்களில் விற்பனை போக எஞ்சிய கள்ளை நிலத்தில் ஊற்றி விரயம் செய்யப்படுகிறது.

இதைத் தடுக்கவே பிரதேசசபை கள்ளைப் போத்தல்களில் அடைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆலோசித்துள்ளது.

(ஐ-111)

# வேலணை சாட்டிப் பகுதியில் மர முந்திரிகை நாற்று

வேலணை, பெப். 11

வேலணைப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு முந்திரிகைக் கன்றுகள் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வேலணை கிழக்கு சாட்டிப் பகுதியில் இதற்கென விசேடமாக நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டு சுமார் 15 ஆயிரம் விதைகள் விதைக்கப்பட்டுள்ளன.

மரமுந்திரிகைக் கன்றுகள் பெற விரும்புவோர் தத்தமது பகுதிகளில் இயங்கும் விவசாய சம்மேளனங்கள் அல்லது சனசமூக நிலையங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மரமுந்திரிகைச் செய்கைக்கென விசேட மூலதன நிதியில் வேலணை பிரதேச சபைக்கு நான்கு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது தெரிந்ததே.

(ஐ-ரீ)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம் தெற்கு, பெப். 11

இணுவில் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் அதிபர் க. கனகராசா தலைமையில் நடைபெற உள்ளன.

இப் போட்டிகளுக்கு வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் முதன்மை விருந்தினராகவும்—

உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன், உடற்கல்விப் பாடப் பொறுப்பாளர் வீ. பாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்—

கலந்து கொள்கின்றனர்.

(ஐ-152)

# பயிற்சிக் கருத்தரங்கு

மேட்டு நிலப் பயிர்ச் செய்கை, பீடைகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவை பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு உரும்பிராய் மேற்கு மூன்று கோயிலடியிலுள்ள திருக்குமரன் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

உரும்பிராய் சமநல சேவை நிலையத்தினால் இப்பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் அனைவரையும் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு உரும்பிராய் விவசாயப் போதனாசிரியர் ம. யோகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ-154)

# பாலர் கல்விக்கு இலங்கையில் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை

## நூல்வெளியீட்டு விழாவில் உரை

நல்லூர், பெப். 11

சர்வதேச அளவில் முக்கியத்துவம் வழங்கப்படும் பாலர் கல்விக்கு இலங்கை அரசு முக்கியத்துவம்கொடுக்கவில்லை; கல்வி அமைச்சின் பொறுப்பில் பாலர் கல்வி இடம் பெறாதது தவறாகும்.

பாலர் கல்விப் பாட்டுப் புத்தக வெளியீட்டு விழாவில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

பாலர் பாட்டுப் புத்தகம் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி சபா. ஜெயராசா மேலும் பேசும் போது கூறியதாவது: —

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கான நூல்கள் உளவியல் அடிப்படை கொண்டவையாக உருவாக்கப்படுகின்றன. தமிழில் அப்படிப்பட்ட உளவியல் அடிப்படை சார்ந்த நூல்கள் எழுதப்படுவதில்லை. 'மலை மேல் ஏறி வா; மல்லிகைப்பூ கொண்டு வா' என்பது சிறுவர்களுக்கென எழுதப்பட்ட பாடல். இதைப் படிக்கும் குழந்தை மலை மீது மட்டும் தான் மல்லிகைப்பூ கிடைக்கும் என்ற எண்ணத்தை மனதில் பதிக்கும். இந்த நிலை மாறி உடல் வளம், சமூக நலம் போன்ற துறைகளை உள்ளடக்கியதான சிறுவர் நூல்கள் உருவாக வேண்டும்.

தென்னிலங்கையில் சிறுவர்களுக்கான உகந்த கையேடுகளைத்தொண்டர் நிறுவனங்கள் ஆசிரியர்களுக்கு வழங்குகின்றன. அந்தப் பணியை இங்கு யாழ். மாநகர சுகாதாரப்பகுதி செய்து வருவது பாராட்டப்பட வேண்டியது.

சமீபத்தில் பாலர் கல்விக்கான நூல் ஒன்று வெளியிடப்பட்டது. கிராமிய மட்டத்தில் அதற்கு முக்கியத்துவம் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக இன்று இந்த நூல் வெளியிடப்படுகிறது. பாலர்கல்வியில் விளையாட்டு மிகவும் முக்கியமான அம்சம். ஆசிரியர்கள் இதில் நன்கு கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி டாக்டர் தெய்வேந்திரன் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ் மாநகர சுகாதாரப் பகுதி பாலர்களின் நலன, ஆத்மீக நலன்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது. மாநகர சபையின் கீழ் 64 பாலர் பாடசாலைகள் உள்ளன. ஐ.நா சிறுவர் நிதியத்தின் உதவியுடன் கடந்த பத்து ஆண்டுகளாக பாலர்களின் கல்வி, உளவியல் வளர்ச்சிக்கான பணிகளை ஆற்றி வருகின்றோம்.

மனித வாழ்வுக்கு சிறுவர்களின் வளர்ச்சி முக்கியம். சுகதேகிபாக, உளத்தாக்கம் அற்றவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அதன் ஒரு பகுதியாகவே இந்த வெளியீடு இடம்பெறுகிறது. பாலர் பாடசாலைகளைப் பொறுத்தவரை மேற்கத்திய கல்வி பொருந்துமா? குறிப்பாக ஆங்கிலப்பாடல்களையே நாம் சொல்லிக்கொடுக்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கல்வி தேவை. கலாநிதி ஜெயராசா பாலர் கல்வியில் மிகுந்த பரிச்சயம் கொண்டவர். எனவே அவரிடம் பாலர்களுக்கு உகந்த பாடல் நூலை எழுதித்தரும் படி கேட்டிருந்தோம். 'யுனிசெவ்' நிறுவனம் அதனை வெளியிட உதவியது— என்று அவர் தெரிவித்தார்.

'யுனிசெவ்' பிரதிநிதி திருமதி பென்னி புறூனி பேசும் போது கூறியதாவது: —

ஆரம்ப அடித்தளம் நல்ல முறையில் அமைவதன் மூலமே மாணவர்கள் இளம் பராயத்தில் கல்வியில் நாட்டம் கொள்ளுவார்கள் என்பதை மேற்கு, கிழக்கு நாடுகள் நன்கு உணர்ந்துள்ளதால்தான் பாலர் கல்வியில் அங்கெல்லாம் மிகுந்த அக்கறை காட்டப்படுகிறது. பாலர் கல்வியின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு 'யுனிசெவ்' அதற்கான உதவிகளைச் செய்கிறது. இன்று குறைந்த அளவிலான நூல்களே வெளியிடப்பட்டுள்ளன. அடுத்த தடவை கூடுதலாக வெளியிடப்படும். சிறுவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு எனது வாழ்த்துக்கள் — என்றார்.

மாநகரசபை பதில் ஆணையாளர் என். தனரஞ்சிதராஜன் பேசும் போது கூறியதாவது: -


யாழ். மாநகர சபை சுகாதார சேவையில் 'யுனிசெவ்' பத்துவருடங்களுக்கு மேலான பங்களிப்பை வழங்கி வருகிறது. மாநகரசபை நிதி பாதிக்கப்பட்ட சமயம் தொண்டர் நிறுவனங்கள் குறிப்பாக 'யுனிசெவ்' சிறந்த வகையில் உதவியது.

இத்திட்டத்தின் கீழ் நன்கு அனுபவமும் ஆராய்ச்சியும் கூடிய முதுநிலை விரிவுரையாளர் பார்வையில் ஆக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பாலர் கல்வியின் மூலம் குழந்தைகள் நல்ல நிலையில் செல்லக்கூடிய தன்மையை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும் — என்றார்.

எஸ். ஜேசுரட்ணம் நன்றியுரை கூறினார். 'யுனிசெவ்' பிரதிநிதி திருமதி பெனி புறூன் நூலை வெளியிட்டு வைத்தார்.

பாலர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ஐ-103)



# சாயி சிந்தனை

இறைவன் எப்போதும் உன்கூட இருக்கிறார். உனக்குள் இருக்கிறார். உன்னைச்சுற்றி இருக்கிறார். இறைவனை நாடித் தேட வேண்டாம். இறைவன் உண்மையான பக்தனுக்காகத் தேடிக் கொண்டிருக்கிறார். இத்தகைய உணர்வுகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வுலகம் கருணையை அடிப்படையாகக் கொண்டது. என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். முழுமையான நம்பிக்கை உன்னைக் காப்பாற்றும். தர்மம் உன்னைக் காப்பாற்றும். இறைவனைத் தேடிப் பார்க்க வேண்டாம். இறைவன் உனக்கு மேல், உன்னுடன், உனக்குள்ளே, உன்னைச்சுற்றி இருக்கிறார். இறைவனிடம் உள்ள [illegible] றது.

[ஆதாரம்:- சாயி அருளமுதம்]

# நாளை

தை 29

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி

நண்பகல் 12. 11 வரை

நட்சத்திரம்: மூலம்

பிற்பகல் 4.08 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 6.34- 8 04

ராகுகாலம்: 11 4-12 34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

உழைப்பினால் விலகும் தீமைகள் மூன்று: துன்பம், தீய ஒழுக்கம், வறுமை.

— வால்டேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரண விநியோகம்

# மிகுதி பொருள்கள் பற்றிய விவரங்கள் சேகரிப்பு

அரியாலை, பெப். 11

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களை விநியோகித்து முடிந்ததும் பொருள்களின் மிகுதி இருப்பு பற்றிய விவரங்களைப் புதிய நடைமுறையின் பிரகாரம் தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்களையும் கேட்டுள்ளார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் நிவாரணப் பொருள்கள் விநியோகித்து முடிந்ததும் நிவாரணப் பொருள்களின் மீதிக் கையிருப்பு விவரங்களை ஒவ்வொரு கிளைகள் ரீதியாகவும் பட்டியல் படுத்தி தமது அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்க அதிபரால் நிவாரண விநியோக சேவை கட்டணத்திற்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களை நிவாரண விநியோகத்திற்கு வழங்கப்படும் பொருள்களின் விலைக்கே விநியோகிக்க வேண்டும். அப்பொருள்களை விலை அதிகரித்து விற்கும் சங்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-17)

## சிவராத்திரி தினத்தன்று

# பக்தர்கள் கீரிமலை செல்ல அனுமதிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 11

சிவராத்திரி தினமான இம் மாதம் 14 ஆம் திகதி இந்துக்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகள் செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு கோரி மேற்படி ஆலயப் பிரகமகுரு யாழ். அரசஅதிபர் ஊடாகப் பலாலியிலுள்ள படைத்தலைமையக அதிகாரிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று கீரிமலை சென்று வழிபாடு செய்வதற்கு இந்துக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (ஐ-5)

# கோழிகளுக்குத் தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம், பெப். 11

கோழிகளுக்கான அம்மைத் தடுப்பூசி மருந்து பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் 11 மணிவரை யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலையில் போடப்படும்.

சிறிய பண்ணையாளர்கள் தமது கோழிகளை அங்கு கொண்டு சென்று இந்த ஊசி மருந்தைப் போட்டுக் கொள்ளலாம் என யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

இதேவேளை

கோழிக்கொள்ளை, கம்போறா ஆகிய நோய்களுக்கு உரிய தடுப்பு மருந்துகள் (சொட்டு மருந்து) வழமை போல சனிக்கிழமை தோறும் நாவலர் வீதியிலுள்ள கால்நடை நிலையத்தில் வழங்கப்படும் என கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-15)

# வாராந்த நிகழ்வு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 30 மணிக்கு 'வேலுலாந் தடக்கை வேந்தன்' என்ற தலைப்பில் காயத்திரி பீடம் இணுவில் 'பிரம்மஸ்ரீ'' பாலசர்வேஸ்வரக்குருக்கள் உரை நிகழ்துவார்.

பேரவையின் தலைவர் சு. திப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக உரையை வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரம்மஸ்ரீ ப மனோகரக்குருக்கள நிகழ்த்துவார். (ஐ 30-173)

# புத்தூர்ச் சந்தை புனரமைப்பு

வலி. கிழக்கு, பெப் 11

வன்செயல்களால் பாதிக்கப்பட்டிருந்த புத்தூர் சந்தைக் கட்டடம் வலி. கிழக்கு பிரதேச சபையினால் இரண்டு லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கட்டடம் பழுதடைந்த நிலையில் அங்கு சந்தை இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை—

இடைக்காடு சந்தையும் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. (ஐ-180)

# பருத்தித்துறை டிப்போவுக்குத் தளபாடம்

வடமராட்சி, பெப். 11

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை சாலைக்கு அலுவலகத் தேவைக்கென புதிய தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இச்சாலை அலுவலகத்திலிருந்த தளபாடங்கள் கடந்த காலத்தில் காணாமல் போயும், சேதமடைந்தும் இருந்தன. இதனால் அலுவலகத் தளபாடங்களுக்குப் பற்றாக்குறை இருந்து வந்தது.

புதிய தளபாடங்கள் வந்து சேர்ந்ததைத் தொடர்ந்து பற்றாக்குறை நீங்கியது. (ஐ 173)

# களவுபோன சைக்கிள் மீட்பு

தென்மராட்சி, பெப். 11

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருடப்பட்ட சைக்கிள் கற்குளிப் பகுதியில் வைக்கோல் குவியலுக்குள் மறைக்கப்பட்டிருந்த நிலையில் படையினரால் மீட்கப்பட்டது.

பஸ் நிலையத்தில் சைக்கிளை விட்டுப் பூட்டிவிட்டு, தொலைபேசி நிலையத்துக்குச் சென்ற ஒருவரின் சைக்கிளே திருடப்பட்டிருந்தது. (ஐ - 117)


உ

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

# அனைத்துலகப் பெண்கள் தினப் போட்டிகள்

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு நடத்தும் அனைத்துலகப் பெண்கள் தினத்தையொட்டி பின்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

| | போட்டி | விடயம் | நேரம் |
|---|---|---|---|
| 1. | தரம் 12, 13 பாடசாலை மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி | ''பெண்களின் பொதுப்பணியும், சமூகக் கணிப்பும்'' | 6 - 7 |
| 2. | மகளிர் அங்கத்தவர் பேச்சுப் போட்டி | ''கூட்டுவில் மகளிர் பிரவேசமும் தடையும்'' | 6 - 7 |

**விண்ணப்ப முடிவு திகதி: 28—02—1999**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**மாவட்டச் செயலாளர்,**
**யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை,**
**இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

அ) மாணவிகள் தமது கல்லூரி அதிபரின் சிபார்சுடனும்,

ஆ) மகளிர் அங்கத்தவர்கள் அங்கத்துவம் வகிக்கும் சங்கத் தலைவர் அல்லது பொது முகாமையாளர் சிபார்சுடனும் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

இ) போட்டிகள் யாவும் 07—03—1999 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். போட்டியாளர்களுக்குத் தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படமாட்டாது.

மாவட்டச் செயலாளர்.

(சி/ 6449)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

## கசிப்பு வேட்டை

நீர்வேலி, பெப் 11

நீர்வேலி வடக்கில் உயிர்க்கொல்லியான கசிப்பு வியாபாரம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மூன்று இடங்களில் திடீர் பரிசோதனை செய்த மது பரிபாலனப் பகுதியினர் சுமார் 24 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியுள்ளனர்.

இக் கசிப்பு வேட்டை சப்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த பொது மக்கள் இப்படியான முறைகேடான வியாபாரத்தையும், உற்பத்தியையும் இல்லாமற் செய்ய வேண்டுமென்றும் - இக் கசிப்புப் பாவனையால் வீண் குடும்ப பத்தகராறுகளும், கொலைகளும், கொள்ளைகளும் மலிந்துள்ளனவென்றும் இவற்றை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டுமென்றும் தெரிவித்தனர். (ஐ-110)

## மரக்குற்றிகள் பறிமுதல்

திருநெல்வேலி, பெப். 11

அனுமதிப் பத்திரமின்றி சிறிய உழவு இயந்திரத்தில் ஏற்றிவரப்பட்ட பச்சை மாமரக்குற்றிகளும், வேப்ப மரக்குற்றிகளும் இணுவிலிலுள்ள பாதுகாப்புப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

பச்சை மரங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும் என்றும் பாதுகாப்புப் படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## வயோதிபர் பராமரிப்பு

சண்டிலிப்பாய், பெப். 11

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் ஆதரவற்ற நிலையில் உள்ள வயோதிபர்களைப் பராமரிப்பதற்காக முதியோர் இல்லம் ஒன்றை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் வெளிநாட்டில் வாழ்வதால் இங்கு பராமரிப்பவர்கள் வருமின்றி வாழ்ந்து வரும் வயோதிபர்களை இந்த இல்லத்தில் வைத்துப் பராமரிக்கவுள்ளதாகவும்—

மானிப்பாய் இணுவில் வீதியில் இதற்கான கட்டடம் ஒன்று பெறப்பட்டுள்ளதாகவும்—

கழகத்தின் செயலாளர் லயன். செ. கேசவராஜன் தெரிவித்தார். (ஐ-135)

## புனரமைப்புக்கூட்டம்

கொழும்புத்துறை, பெப். 11

கொழும்புத்துறை கிழக்கு ஐக்கிய நாணய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கதின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மண்டபத்தில் யாழ். பிராந்திய சபைப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

## செத்தல் மிளகாய் உச்ச விலையில்

சண்டிலிப்பாய், பெப். 11

குடாநாட்டில் செத்தல் மிளகாய்க்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பண்டத்தரிப்புப் பகுதியில் சில கடைகளில் நூறு கிராம் செத்தல் மிளகாய் 75 ரூபாவாக விற்கப்பட்டது. இவ்விலை அதிகரிப்பினால் பாவனையாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-135)

## தளபாடம் கிடைத்தது

வேலணை, பெப். 11

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நயினாதீவு நாவலர், வேலணை செட்டிபுலம் ஆகிய இரு சனசமூக நிலையங்களுக்கும் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி இரு சனசமூக நிலையத்திலும் இயங்கும் நூலகம் மற்றும் பாலர் பாடசாலைத் தேவைக்கெனவே தளபாடம் வழங்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்விரு சனசமூக நிலையத்திற்குமான தளபாடத்திற்கென சுமார் இரண்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. (ஐ-ரீ)

## இடி வீழ்ந்து ஆலய கோபுரம் சேதம்

தென்மராட்சி, பெப். 11

கைதடி கோப்பாய் வீதியில் உள்ள தாக்கடிப்பித்தான் வைரவர் ஆலயமரம் ஒன்றில் இடி வீழ்ந்ததில் மரக்கிளையும் மணிக்கூட்டுக் கோபுரமும் சேதமடைந்தன.

கடந்த திங்கள் அதிகாலை இச் சம்பவம் இடம் பெற்றது. (ஐ - 117)

## மயானத்தில் சிரமதானம்

நெல்லியடி. பெப். 11

புலோலி கிழக்கிலுள்ள பல்லப்பை இந்து மயானம் கடந்த வாரம், புலோலி தெற்கு இளைஞர்களினால் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டது. மயானத்தைச் சுற்றி வேப்பமரக் கன்றுகளும் நடப்பட்டன. (ஐ-109)

## கிணற்றுக்குப் பலி

கோண்டாவில், பெப். 11

சித்த சுவாதீனம் அற்றவர் எனக் கூறப்படும் ஒருவர் கடந்த திங்கட்கிழமை இரவு கிணற்றில் வீழ்ந்து மரணமாகியுள்ளார்.

தாவடியில் வசித்துவரும் வேலாயுதம் புவனேஸ்வரன் (வயது 52) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவர் இதற்கு முன் சில தடவைகள் கிணற்றில் வீழ்ந்து காப்பாற்றப்பட்டிருந்தார். (ஐ-ரீ)

## கிராம அலுவலர் பதிற் கடமை

அரியாலை, பெப். 11

ஈச்சமோட்டை கிராம சேவையாளர் எஸ். கே. பாலசிங்கம் குருநகர் றெக்கிளமேசன் கிழக்குப் பிரிவுக்கான பதிற் கிராம சேவையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

றெக்கிளமேசன் கிழக்குப் பகுதி மக்கள் தமது தேவைகளுக்குத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-17)

## வீதி திருத்தப்படவில்லை

கொழும்புத்துறை, பெப். 11

சரசாலை தெய்வங்கேணி வீதி, நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வீதி ஆகிய இரண்டும் கடந்த 15 வருடங்களுக்குமேலாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளன.

இவ் வீதிகள் இவ்வாண்டு திருத்தப்படுமா என இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஐ-30)

உ
சிவமயம்

# மஹா சிவாச்சார்ய அபிஷேக விஞ்ஞாபனம்

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் திருவருளும் வித்யாகுரு நியாயசிரோமணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களின் குருவருளும் சேர்ந்த ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் தை மாதம் 29 ஆம் நாள் (**12-2-99**) வெள்ளிக்கிழமை ஏகாதசி திதியும் மூல நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுப தினத்தில்

காலை 7 மணி 35 நிமிடம் முதல் 8 மணி 35 நிமிடம் வரை வரும் கும்பலக்ன சுபவேளையில் நகுலேஸ்வரத்தைச் சார்ந்த

சபாரட்ணக் குருக்கள்
அவர்களின் புத்திரர்

**நாராயணசர்மா** அவர்களுக்கு

சிவாச்சார்ய அபிஷேகம்
(குருப்பட்டம் வழங்கல்)

திருவருளுடன் பெரியோர்கள் ஆசியும் கூடியிருப்பதால் அத்தருணம் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
நல்வரவை நாடும்
பிரதம சிவாச்சார்யாரும்
பரிபாலன சபையோரும்.

**இடம்: வேரற்கேணி கந்தசாமியார் கோயில் தென்மட்டுவில்.**

(63007)

# கண்ணீர் அஞ்சலி



எமது உற்ற நண்பர்

**V. M. K. குலேந்திரன்** அவர்கள்

திடீர் மரணம் எய்தியதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்,**
**அருள் முருகன் நகையகம், யாழ்ப்பாணம்.**
**சிவா நகைமாடம், சாவகச்சேரி.**

(சி/6453)

## அரசே போரை...

(முதலாம் பக்கத் தொடர்)

சமாதானத்துக்கான முதற்படியாக மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவந்து வாழ வசதியாக இங் ஆக்கிரமித்துள்ள இராணுவம் வளமான மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார்.

சர்வ மதத் தூதுக் குழுவினரிடம் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது:-

சந்திரிகாவின் கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில்தான் பெரும் அழிவுகள் ஏற்பட்டன. இராணுவ நடவடிக்கைகளும் உச்சக் கட்டத்தை அடைந்தன. இடம் பெயர்வுகள், காணாமல் போதல், சிங்கள — தமிழ் இளைஞர்களின் அழிவுகள் அதிகரித்தன.

''சமாதானத்துக்கான யுத்தம்'', ''சமாதானத்துக்கான முன்னெடுப்புக்கள்'', ''தீர்வுப்பொதி'' என்று போலி வேடங்கள் பூண்டு மேற்குலக நாடுகளையும், சிங்கள மக்களையும் ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே இந்த நான்கு ஆண்டுகளையும் சந்திரிகா கடத்தியுள்ளார்.

சமாதானம் என்பதை ஸ்ரீலங்கா அரசுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் வலியுறுத்த வேண்டுமே தவிர விடுதலைப் புலிகளுக்கோ, இங்கு வாழும் மக்களுக்கோ வலியுறுத்த வேண்டியதல்ல.

போரை நிறுத்தி இங்கு அவலப்பட்டு மரங்களுக்குக் கீழும் காடுகளின் மத்தியிலும், பாடசாலைகள், ஆலயங்கள், வீதிகள் போன்றவற்றிலும் உணவு இன்றி, உறைவிடம் இன்றிக் கஷ்டப்படும் தமிழ் மக்களைத் தம் இருப்பிடங்களுக்கு சுமுகமான சூழ்நிலையில் திரும்பிச் சென்று சகல உரிமைகளுடனும் கௌரவத்துடனும் வாழ விட வேண்டும்.

சமாதானத்தை அடைவது என்பது இன்று போலிவேடம் பூண்டுள்ள சந்திரிகா அரசுக்கும் சந்திரிகாவினால் வழி நடத்தப்படுகின்ற இராணுவத் தலைமைக்குமே இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் நிலை தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களையே ஸ்ரீலங்கா அரச சிங்கள பக்கம் மத்தியில் பரப்பியுள்ளது.

இந்த நிலையில் வன்னிக்கு நேரடியாக வந்து யுத்தத்தால் இன்னலுறும் மக்களின் நிலையைப் பார்வையிட்டு அவர்களின் துயர நிலையை உணர்ந்துள்ள நீங்கள் இதனைச் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துரைக்கவேண்டும்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகக் கடுமையாக உழையுங்கள்.

இப்படித் தமிழ்ச்செல்வன் கூறினார்.

சர்வமதக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் பல பகுதிகளுக்கும் சென்று அகதிகளின் நிலையை நேரில் பார்த்ததுடன் அவர்களுடன் கலந்துரையாடினர்.

உ

# மஹா கும்பாபிஷேகமும் திருக்கல்யாண உற்சவமும்

இணுவில் ஸ்ரீவிஸ்வேஸ்வர சிவன் கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட சந்திரசேகரர் பார்வதி அம்பிகைக்கு நாளை வெள்ளிக்கிழமை 12—02—99 காலை 6.15 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும்.

பிரதம குரு
**தாணு — வாசுதேவக்குருக்கள்**

கும்பாபிஷேக உபயம்
**திருமதி செ புவிநாயகம்**

திருக்கல்யாண உபயம்
**தெ. உதயசங்கர்**

அனைவரும் வருக!

தர்மகர்த்தா
சி. பரமேஸ்வரன்

(63010)

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகர வர்த்தகர்

**கணபதிப்பிள்ளை குலேந்திரன்**

(உரிமையாளர், வீ. எம். கே. நகை மாளிகை)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**இராசையா பத்தர் இராசகோபால்,**
**இராசையா பத்தர் தெய்வேந்திரன்,**
**இராசையா பத்தர் நாகேந்திரன்,**
**இராசையா பத்தர் இராகவன்.**

சாவகச்சேரி.

(சி/6455)

# கண்ணீர் அஞ்சலி

ஜெசிபா ஏஜென்ஸி வி எஸ் பி. குறாப் ஆகிய நிறுவனங்களின் பங்காளரான இ. ஜெயகுமாரின் தந்தையார்

**வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி**

அவர்களின் மறைவையொட்டி அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்

**றோயல் வைன் ஸ்ரோர்ஸ்**

96, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6462)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

11-02-1999

எமது செயலக சமுர்த்தி ஊக்குவிப்பாளரான
செல்வி விசாகரத்தினவேல் சுகன்யா
அவர்களின் தாயார்

**திருமதி சிவமணி விசாகரத்தினவேல்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும்**
**பிரதேச செயலக நலன்புரிச்சங்க அங்கத்தவர்களும்,**
வலி. மேற்கு பிரதேச சபை.

(63000)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 — 07 — 1911



மறைவு
18 — 01 — 1993

**மூத்ததம்பி கந்தையா**

(மட்டுவில் தெற்கு)

**திதி:** 11 — 02 — 1999

'' ஆண்டு ஆறாயிடினும்
ஆறுமோ எங்கள் உள்ளம்? ''

என்றும் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(63001)

உ
சிவமயம்

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் வெகுதானிய வருடம் தை மாதம் 28 ஆம் நாள் (11-02-99) வியாழக்கிழமை காலை 6-00 மணி முதல் 8-00 மணிவரை வரும் சுபவேளையில்

# புதிய ஜனனி நகை மாடம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து எம்மை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
S. விஜெயகுமார்

**பிரதான வீதி,**
**பருத்தித்துறை.**

(63002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின்...
(முதலாம் பக்கத் தொடர்)
களின் நிலைப்பாட்டை அறிவதில் ஆர்வம் காட்டினர் என்று தெரியவந்தது.
'ஜனாதிபதி தீர்வுப் பொதியை முன்வைத்துள்ளார் அதன் மூலம் சமாதானம் ஏற்பட விடுதலைப் புலிகளின் ஆதரவு தேவை.
— இப்படி சர்வமதக் குழுவினர் கோரினர். (இ-3)

மேலும்...
(முதலாம் பக்கத் தொடர்)
வழங்கப்படும் என்றும்—
ரிக்கெட் பெறுபவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். ரயில் நிலையத்துக்குப் பயண ஏற்பாட்டுடன் வர வேண்டும் என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (-3)

6 படையினர்...
(முதலாம் பக்கத் தொடர்)
பர் தயானந்த லொக்கு கலப்பதிக்கு 15 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் —
இராணுவத்தைச் சேர்ந்த வர்களான மேஜர் வஜிர சமரசிங்கவுக்கு 90 வருடங்களும் மேஜர் கவிஸ்-சுக்கு 75 வருடங்களும், கப்டன் ஜாலிய தனஞ்ஜெயவுக்கு 70 வருடங்களும் கடூழியச் சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டன.
ஏனைய குற்றவாளிகளான கோப்ரல் எஸ். ஏ. சேனரத்னாவுக்கு 230 வருடங்களும், சார்ஜன்ட் உப்புல்சந்தன காரியவாசவுக்கு 75 வருடங்களும், சிப்பாய் ஜக்சன் குமார சிங்கவுக்கு 15 வருடங்களும் சிறைத்தண்டனைகள் வழங்கப்பட்டன.
இந்த வழக்கு சுமார் இரண்டரை வருடங்களாக விசாரிக்கப்பட்டு வந்தது. [இ-6]

## மகாசங்கத்தினர் நேற்று கூட்டம், ஊர்வலம்

''வடமேல் மாகாண சபைத் தேர்தல் ரத்துச் செய்யப்பட்டு ஜனநாயக முறையில் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.''
இப்படி மகாசங்கத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் நேற்று மாலை இவர்கள் நடத்திய கூட்டத்தில் சுமார் 300 பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர்.
இந்தக் கூட்டத்தின் இறுதியில் மகாசங்கத்தினர் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவின் இல்லத்துக்கு ஊர்வலமாகச் சென்று மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

## கரபந்தாட்ட இறுதிப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் நாளை பிற்பகல் 2.45 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கின்றன.
தென்மராட்சி வலயப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.
இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-
★ 17 வயது பிரிவு-நாவற்குழி ம. வி. எதிர் கைதடி முத்துக்குமாரசாமி ம. வி.
★ 19 வயது பிரிவு-மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி. எதிர் நாவற்குழி ம. வி. (இ-3-133)


# நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
## A/L 2000
அசேதன இரசாயனம்
ஆரம்பம் 13-02-99 சனி 4.30 மணிக்கு
ஆசிரியர்: N. மகேஸ்வரன்
A/L 2001 இரசாயன
வகுப்பு நடைபெறுகின்றது
(63013)



எமது புதிய
வெளியீடுகள்!
விஜயகாந்த், லைலா
① கள்ளழகர்
பிரபுதேவா, கீர்த்தி
② நினைவிருக்கும் வரை
ஸ்ரீகாந், சௌந்தர்யா
③ வெள்ளி நிலவே
(CD வெளியீடு)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/6460)



தொழில் நுட்பவியல்
கல்நடை அபிவிருத்தி
போதனாசிரியர் பதவிக்கு
ஆள்சேர்ப்பதற்கான
விண்ணப்பப்படிவம்
விற்பனையாகின்றது.
விலை ரூபா 2.50
முடிவு திகதி 5-3-99
விவரங்கள்
பார்வையிடலாம்.
பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(சி/6459)



நிரு
ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
கணக்கீடு
AL 99, 98 Day
கிரயக் கணக்கீடு
ஆரம்பம்:
வியாழன் 6-30 a.m.
வெள்ளி 4-30 p.m.
S. COLLINS
(BBA)
(63012)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனங்களின் பங்காளர்
இ. ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தையாரான
### வேலுப்பிள்ளை
### இரத்தினசபாபதி
அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
—சக பங்காளர்கள்
ஜெனியா ஏஜென்ஸி,
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வி. எஸ். ரி. குறூப்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/6461)

## உ
சிவமயம்
## திருமண அழைப்பு

அன்புடையீர்!
இறையருள் முன்னிற்க ஆன்றோர்கள் ஆசிகளுடன்
நிகழும் வெகுதானிய வருஷம் தைத் திங்கள் 29 ஆம் நாள்
12-02-1999 வெள்ளிக்கிழமை முற்பகல் 8.39 மணி முதல் 10.04 மணி வரையுள்ள மூல நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய மீனலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
தேவலிங்கம்
(உரிமையாளர்:
மலர் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்.)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
இரஜனி
அவர்களுக்கும்

திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்தபடி வண்ணை 345, கோவில் வீதி, நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும் திருமாங்கல்ய தாரண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து பின்னர் நடைபெறும் விருந்து உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்,

திருமதி மயில்வாகனம் சோதி
இல. 5, சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி க. இராசரத்தினம்
க. கணபதிப்பிள்ளை அன்சன்ஸ்
45, பிரதான வீதி,
பண்டாரவளை.

''பொற்பதி''
அறுகம்புலம்,
காரைநகர்.

(இரு வீட்டார் அழைப்பு)
(சி/6451)

''குமர கிரி''
கோவளம்,
காரைநகர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை
### பொன்னுத்துரை
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், C. T. B.)
மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இணுவில் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பொன்னுத்துரை அவர்கள் 09 - 02 - 99 அன்று காலமானார்.
இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மௌனசாமி (மிருக வைத்தியர், திருகோணமலை), காலஞ்சென்றவர்களான தங்கம்மா, பொன்னையா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஞ்சனாதேவி, பிறேமாதேவி (கொழும்பு), சுலோஜனா, ரவிதரன் (சுவிஸ்), சுதரன் (ராஜ மாதங்கன் எட்டுக் களஞ்சியம், இணுவில்), சிறீதரன் (சுவிஸ்), ஜெசிதரன் (யாழ். மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமகுமார் (D. A), லோகராஜா (L. R. S அரிசி ஆலை, தம்பலகாமம்), தயாளன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), ஸ்ரீநளினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், கோகுலன், கார்த்தீபன், உதயதீபன், ஞானதீபன், கஜானினி, தர்ஷிகா, வினோஜன், விஜனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10-2-99) புதன்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
சசிதரன்
(மகன்)
சிவகாமி அம்மன் கோயிலடி
இணுவில் மேற்கு. [63008]

### சுப்பையா தர்மலிங்கம்

சந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தொல்புரம்மேற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தர்மலிங்கம் திருகோணமலையில் (8-2-99) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் நந்தகுமார் (டென்மார்க்), விஜயலட்சுமி, சுகுமாரன், சந்தனலட்சுமி, ஜெயலட்சுமி (நோர்வே), தனலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நேசமலர் (டென்மார்க்), திருநாவுக்கரசு (களஞ்சியபொறுப்பாளர், யாழ். பல நோ.கூ. சங்கம்), சுகந்தினி, பஞ்சலிங்கம், தேவதாசன் (நோர்வே), பாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
தகவல்:
த. சுகுமாரன் (மகன்)
சி. திருநாவுக்கரசு
சுழிபுரம். (சி/6454) (மருமகன்)


# JAFFNA TECHNICAL INSTITUTE
Regd. No. 15251
JAFFNA SRI LANKA
## Special English Classes
● Spoken English with Grammer

| | | |
|---|---|---|
| TUESDAY | 3-30 p.m | புதிய நேரம் |
| WEDNESDAY | 3-30 p.m | |

● Toefl

| | | |
|---|---|---|
| TUESDAY | 4-30 p.m | புதிய நேரம் |
| WEDNESDAY | 4-30 p.m | |

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 16-02-99 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணி
Conducted by S. THEIVATAVAPALAN
மேலதிக விவரங்களுக்கு நேரில்: 52/1, Stanley Road, Jaffna. No. 7, Palaly Road, Jaffna.
(றெயில்வே கடவை அருகில்)
(62987)
— DIRECTOR



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1999 பெப் 11-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org